Copies can be had from the
Assistant Director,
Government Publiction Depot,
110, Anna Salai,
Chennai-600 002.

©
Published under Rules 280 and 283 of
the Tamil Nadu Legislative Assembly Rules
and printed by the
Director of Stationery and Printing,
Chennai-600 002.

வெளியீடு : 29-5-2012 Issued: 29-5-2012

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**திங்கட்கிழமை, ஏப்ரல் 2, 2012—தொகுதி 21—எண் 2**
**Monday the 2nd April, 2012—Volume 21—No. 2**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009.*
**Legislative Assembly Secretariat, Chennai-600 009.**

விலை ரூ. **3.00]** **[Price Rs. 3.00**

**2–4–2012**

**உள்ளடக்கம்**


*பக்கங்கள்*

**இரங்கல் தீர்மானம்—**

*உறுப்பினர் திரு. எஸ்.பி. முத்துக்குமரன் அவர்கள் மறைவு* 171-172

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## திருவள்ளுவர் ஆண்டு 2043—பங்குனி 20

## 2012 ஏப்ரல் 2, திங்கட்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. டி. ஜெயக்குமார்** அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்திவ் வுலகு."

நேற்று இருந்தவர் ஒருவர், இன்று இல்லாமல் இறந்து போனார் என்று சொல்லப்படும் நிலையாமை ஆகிய பெருமை உடையது இவ்வுலகம்.

## இரங்கல் தீர்மானம்

### உறுப்பினர் திரு. எஸ்.பி. முத்துக்குமரன் அவர்கள் மறைவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இரங்கல் தீர்மானம்.

"புதுக்கோட்டை மாவட்டம், புதுக்கோட்டை தொகுதியிலிருந்து 2011 ஆம் ஆண்டு தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவரும், இந்திய கம்யூனிஸ்டு பேரியக்கத்தில் இளம் வயதில் தன்னை முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டு மக்கள் பாராட்டும் வகையில் சிறப்புடனும், திறம்படவும் பணியாற்றியவரும், எளிமையும், இனிய பண்புகளைக் கொண்டவரும், தனது தொகுதி மக்களுக்குத் தொண்டு செய்வதில் மிகுந்த அக்கறை காட்டியவரும், அனைத்துத் தரப்பினரிடத்திலும் கட்சிப் பாகுபாடின்றி அன்பாகவும், பண்பாகவும் பழகி, அனைவரின் அன்பையும், பாராட்டுதலையும் பெற்றவருமான திரு. எஸ்.பி. முத்துக்குமரன் அவர்கள் 1—4—2012 அன்று சாலை விபத்தில் மறைவுற்ற செய்தி அறிந்து இப்பேரவை அதிர்ச்சியும், ஆற்றொணாத் துயரமும் கொள்கிறது.

[பேரவைத் தலைவர்]

அன்னாரது மறைவால் அவரைப் பிரிந்து வருந்தும் அவரது இயக்கத் தோழர்கள் மற்றும் அவரது குடும்பத்தினருக்கு இப்பேரவை தனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறது.

இந்த இரங்கல் தீர்மானத்தை நிறைவேற்றும் முகத்தானும், மறைந்த உறுப்பினருக்கு மரியாதை செலுத்தும் வகையிலும் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

*(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்ததன்மூலம் தீர்மானம் நிறைவேற்றப்பெற்றது.)*

மறைந்த இப்பெருந்தகைக்கு மரியாதை செலுத்தும் வகையில், பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் ஒத்திவைக்கப்படுகின்றன.

பேரவை மீண்டும் நாளை *(3–4–2012)* செவ்வாய்க்கிழமை காலை *10–00* மணிக்குக் கூடும். வணக்கம்.

*பின்னர், பேரவை காலை 10–02 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.*

******